1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அங்கே இருக்கின்ற மார்க்கெட் மதிப்பு என்று கொள்ளாமல் அரசின் மதிப்பீட்டுக்குத் தருவதற்கு அந்தக் கோயில் தயாராக இருக்கிறது. ஆனால் நிலத்தில் குடியிருப்பவர்கள் எந்தப் பரப்பளவில் குடியிருக்கிறார்கள் என்பதை அளந்து சொல்லக்கூட எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அறங்காவலரால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியவில்லை. தனியாக நிர்வாக அதிகாரியை நியமிக்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்களும் குடியிருப்பவர்களிடத்தில் சொல்லி எந்த அளவு பரப்பளவில் குடியிருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தந்தால் அரசாங்க மதிப்பீட்டுக்கு அந்த நிலத்தைக் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக நாம் தரலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அங்கேயுள்ளவர்களுக்கு மனை கொடுப்பது என்றால் மீதப்படும் தொகையை ரெவின்யூ இலாக்கா எச். ஆர். அண்ட் சி. இ.-க்குக் கொடுக்கட்டுமே. நாமினல் காஸ்ட் என்று எப்படி எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை.

(விடை இல்லை).

தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்ட அகதிகள்

*303 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு முடிய இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா முதலான நாடுகளிலிருந்து வந்துள்ள எத்தனை அகதி குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்டிருக்கின்றன?

(இ) மேற்படி அகதிகள் மேம்பாட்டிற்கென குழு Committee) ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்ட அகதிக் குடும்பங்களின் விபரம்:

இலங்கை அகதிக் குடும்பங்கள்—33,437

பர்மா அகதிக் குடும்பங்கள்—3,139

மற்ற அகதிகளின் குடும்பங்கள் இல்லை.

(இ) ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அகதிகளாக வந்து நம்முடைய தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் என்னென்ன வசதிகளைச் செய்து தருகிறது? இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தருவதில் மிகுந்த காலதாமதம் ஆகின்றதே, அதைப் போக்க அரசு என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அந்தக் கேள்விக்கு இதில் பதில் இல்லாவிட்டாலும் நடைமுறையில் இருப்பதைக் குறிப்பிடுகிறேன். 5,000 ரூபாய் வரையில் அதிகமாக அவர்களுக்கு தொழில் செய்ய கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது. அதற்குக் கீழே கடன் கேட்டாலும் கொடுத்து வருகிறது. அவர்கள் ஒரு இடத்தைப் பார்த்து, சாகுபடி செய்ய வசதி உள்ளவர்களாக இருந்தால், சாகுபடி செய்ய நிலம் கொடுக்கிறது. இவைகள் அனைத்தும் செயல்பட்டு வருகிறது. ஆனால் நடைமுறையில் அவர்கள் வாங்கும் பணத்தைக் கொண்டு கடைகளை வைக்கவோ அல்லது மற்றத் தொழில்களை நடத்தவோ முடியாமல் சிரமப்படுகிறார்கள். ஒரு இடத்தில் நிலைக்காமல் இருக்கிறார்கள். ஆனால் சிலபேர் நல்லமுறையில் தொழில் செய்தும் வருகிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்கெல்லாம் ஒரு குழு அமைத்து அதன் மூலமாக அவர்களுக்கு வேண்டிய சலுகைகளையெல்லாம் கொடுப்பதற்காக அந்தக் குழுவை அமைத்திருக்கிறார்கள். அவர்களின் தேவை பற்றி அந்தக் குழுவினர் என்னென்ன சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள், எத்தனை சிபார்சுகளை அரசு பூர்த்தி செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, தேயிலைத் தோட்டங்களில் இருந்தால், ரப்பர் தோட்டங்களில் இருந்தால் அந்தத் தொழிலாளர்களின் நலன்களைக் காக்கவும், அகதிகளைக் குடியமர்த்தும் திட்டங்களைக் கவனிக்கவும், தொழில்

1975 நவம்பர் 11]

கடன்களை வழங்கவும், மறுவாழ்வுக்கான வாய்ப்பு, ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அகதிகளின் புனர் வாழ்வை அமைப்பதைக் கவனிக்கவும் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, சிலோனிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தான் தமிழர்களை வெளியேறச் சொல்கிறார்கள், அதனால் அகதிகளாக வருகிறார்கள். சிங்கப்பூரிலும், மலேஷியாவிலும் இப்பொழுது அந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, இங்கே குறிப்பு இல்லை. அதை நாமே நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் வந்த அகதிகள் பலயிடங்களில் குடிதண்ணீரே இல்லாத இடங்களில் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடன் கேட்டுப் பல்லாண்டுகளாகியும் கொடுக்கப்படுவதில்லை என்று மனுக் கொடுக்கிறார்கள். யார் யார் அந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள்? அதில் சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதைப் பற்றிய தகவல் இப்போது இல்லை. குழு போடப்பட்டதா என்பது கேள்வி. போடப்பட்டது என்று சொன்னேன். உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறிய வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் குழு பற்றிய கேள்வி வருகின்ற நேரத்தில் குழு உறுப்பினர்களைப் பற்றிப் பதில் சொல்லாதது முறையாக இல்லை. நாளைக்காவது குழு உறுப்பினர்களைப் பற்றிய பட்டியலை* அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

* 143-145-ம் பக்கத்தில் பேரவை விதி 82(ஏ) இன் கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையைக் காண்க.